بسم الله الرحمن الرحيم



# FRIDAY SERMON

31 May 2019

(25 Ramadan 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH MUNIR AHMAD AZIM**

## THE GREATNESS OF LAYLATUL QADR

## லைலத்துல் கத்ரின் மகத்துவம்

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

**உ**லக முஸ்லீம்கள் மற்றும் தனது தோழர்களுக்கு சலாம் கூறிய பிறகு தஷஹ்ஹீதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக் கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை ஆரம்பித்தார்.

1. **அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையேனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்**
2. **நிச்சயமாக நாம் இதனை (குர்-ஆன்) தீர்ப்பிற்குரிய இரவில் இறக்கினோம்.**
3. **தீர்ப்பிற்குரிய இரவு என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?**

### 4. தீர்ப்பிற்குரிய இரவு, ஆயிரம் மாதங்களை விட மிகச் சிறந்ததாகும் (97:1-6)

ஒரு முறை அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனு இஸ்ரேலின் மத்தியில் வாழ்ந்த ஷம்சூன் (ரலி) என்ற ஒரு புனிதரின் வாழ்கையைக் குறித்து விளக்கினார். அப்புனிதர் 1000 மாத காலம் அனைத்து வகையான இறை வழிபாடு மற்றும் புனித போர்களில் மூழ்கி வாழ்ந்து வந்தார். இக் கதையைக் கேட்டு, சஹாபிகளில் ஒருவர் **"நமது சமுதாயமக்களின் ஆயுள், ஹஸ்ரத் ஷம்சூன் (ரலி) அவர்களின் ஆயுள் காலத்தைவிட மிக குறைவாகயிருப்பதால் அன்னாரை போன்ற அதே அளவிலான இறைவழிபாட்டுச் செயல்களை இக் குறுகிய ஆயுள்காலத்திற்குள் ஒருபோதும் நமக்கு செய்ய முடியாது" என்று ரசூலுல்லாஹ்வுக்கு சுட்டிக் காட்டினார்.** அந்த நேரத்தில்தான் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தோன்றி சூரா அல் கத்ர் ஓதிகாட்டினார்.

## THE BENEFITS OF THE NIGHT OF DECREE
## லைலத்துல்கத்ர் இரவின் நன்மைகள்

அபூ குறைரா (ரலி) மற்றும் பிற ஹதீஸ் விவரிப்பாளர்களுடைய கருத்துகளின் அடிப்படையில் லைலத்துல் கத்ரின் இரவில் எண்ணற்ற வானதூதர்கள் பூமியில் இறங்குகிறார்கள், இதன் காரணமாக சொர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. அந்த நேரத்தில் தீபங்கள் பிரகாசிக்கின்றது, சிறப்புமிக்க வகையில் இறையடையாளங்கள் வெளிப்படுகின்றது, விண்ணுலகம் திறக்கப்படுகின்றது. மக்களுக்கு அதை வெவ்வேறு நிலைகளில் சந்திக்க முடியும். அதாவது அது, அவர்களின் திறன், அவர்கள் அடைந்த ஆன்மீக நிலை மற்றும் அவர்கள் பெற்ற ஈமானின் அளவினை பொறுத்திருக்கிறது. சிலர் ஆகாய பூமிகளின் சிம்மாசனத்தை பார்வையிடுவதற்கான திறனைப் பெற்றிருப்பார்கள். அவர்கள் விண்ணுலகைப் பார்வையிடும் பொழுது வானதூதர்கள் அங்கு பல்வேறு இறைவழிபாட்டு செயல்களில் ஈடுபட்டிருப்பதாக காண்பார்கள்.

அதாவது சிலர் கியாமில், மற்று சிலர் றுக்குவில், வேறு சிலர் சஜ்தாவில், மற்று சிலர் திக்கிரில், வேறு சிலர் சுக்குர் செய்கின்றனர் இன்னும் சிலர் தஸ்பீஹ் மற்றும் தஹ்லீல் போன்றவற்றில் ஈடுபட்டிருக்கின்றார்கள் அதாவது சலாத்தின் வெவ்வேறு நிலைகளில் வானதூதர்கள் மூழ்கியிருப்பதை காணலாம். மற்றும் சில மக்களுக்கு சொர்க்கத்தை காண முடிகிறது. அதன் அரண்மனைகள் மற்றும் வீடுகள், அதிலுள்ள ஹூறிலிங்கள், ஆறுகள், மரங்கள் மற்றும் பழங்கள் போன்றவையை காணமுடிகிறது. சொர்க்கத்தின் மேல் மாடியான பரலோக சிம்மாசனத்தின் பார்வையைப் பெறுபவர்களும் உண்டு. சிலர் நபிமார்களின் தங்கிடங்களை பார்வையிடுகின்றனர். சிலர் அல்லாஹ்வின் நண்பர்கள், ஷஹீத்து மற்றும் சித்தீகீங்களை பார்வையிடுகின்றனர். அதைபோலவே அனைத்து விதமான முகத்திரைகளும் விலகி கருணைமிக்கவனாகிய இறைவனின் சிறப்புமிக்க அழகை தரிசீப்பதற்கான வாய்பை சிலர் பெறுகின்றனர். அதை தவிர அவர்களுக்கு வேறு எதுவும் காட்சியளிப்பதில்லை.

இந்த சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு காட்சியளிப்பது அனைத்தும் அல்லாஹ்வின் அடையாளங்களாகும். பல மக்களும் அல்லாஹ்வை மிகவும் ஒளி நிறைந்த ஒரு விளக்காகவும், அவனை தரிசிக்ககூட முடியாத அளவுக்கு பிரகாசம் நிறைந்ததாகவும் காண்கின்றார்கள். மேலும் அல்லாஹ்வை மனித வடிவத்தில் காணக் கூடிய பிற மக்களும் உள்ளனர். அல்லது எதுவும் இல்லாமல், ஒரு வெற்று இடத்தை போன்ற நிலையில், என்னவென்று கூற முடியாத அளவில் சிலர் அவனை பார்வையிடுகின்றனர். ஆனால் அல்லாஹ் நம்மிலும் நம்மைச் சுற்றியும் இருக்கின்றான். அவன் படைத்த அனைத்து இடங்களிலும் அவன் நிரம்பியிருக்கின்றான். இவையாவும் அல்லாஹ்வின் அடையாளங்களாகிறது. எனவே, அல்லாஹ் தனது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும், அவன் நேசிக்கும் மக்களுக்கும் இத்தகையை அடையாளங்களை வெளிப்படுத்திகாட்டுகிறான். மேலும் யாருக்கு இந்த உதவியை வழங்க அவன் விரும்புகிறானோ, அவர்களுக்கு இத்தகைய அடையாளங்களை காண்பிக்கின்றான்.

ஹஸ்ரத் அயிஷா (ரலி) அவர்கள் அறிவித்த ஒரு ஹதிஸின்படி **“பிற இரவுகளுடன் ஒப்பிடும்போது ரமலானின் இறுதி பத்து இரவுகளில் இறை**

**வழிபாட்டுச் செயல்களைச் செய்வதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதிக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்"** (முஸ்லீம், மிஸ்காத்)

பல ஹதீஸ்களின்படி, லைலத்துல் கத்ர் ரமலானின் கடைசிபத்து இரவுகளில் ஒற்றைப்படை இரவுகளில் ஒன்றிலாகும் (அதாவது 21, 23, 25, 27, 29) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள் ரமலானின் கடைசி பத்து இரவுகளில் திரு நபி (ஸல்) அவர்கள் மசூதியில் தங்கியிருப்பது வழக்கமாகயிருந்தது. மேலும் "லைத்துல் கத்ர் இரவை ரமலானின் கடைசி பத்தில் தேடிக்கொள்ளுங்கள் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அயிஷா (ரலி) அவர்கள் தெரிவித்ததாக இன்னொரு நபிமொழியில் கணலாம் **"அல்கத்ரின் இரவைக் காணமுடிந்தால், ஒரு துவாவை ஏராளமாக ஓதுமாறு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியிருந்தார். அத்துவா இதுவாகும் "இன்னக்க அப்வான் துஹிப்புல் அப்வா பஅபுவன்னி யா அல்லாஹ்" "அல்லாஹ்வே நீ பெரிதும் மன்னிப்பவனாகவும், மன்னிக்க விரும்புகிறவனாகவும் இருக்கிறாய், எனவே நீ என்னை மன்னிப்பாயாக"** (மிஸ்க்காத், இப்னுமாஜ, திர்மிதி)

ஆகவே நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள் உங்கள் மனந்திரும்புதலை அல்லாஹ் ஏற்றுக்கொள்வதுடன் லைலத்துல் கத்ரின் எல்லையற்ற உதவிகளை வழங்கிகொள்ளவும் செய்வான். நிச்சயமாக, ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமின் அனைத்து நேர்மையான உறுப்பினர்களும் அதிர்ஷ்டசாலிகள்தான். ஏனெனில் இக்காலகட்டத்தில் அல்லாஹ் தேர்ந்தெடுத்த இமாமை அங்கீகரிப்பதற்கான நல்வாய்ப்பை அவர்கள் பெற்றுள்ளனர். மேலும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதரான கலீ∴பத்துல்லாவுக்கும் அவர்கள் கீழ்ப்படிந்தனர். இந்த நூற்றாண்டில் இவ்வுலகத்தை சூழ்ந்திருக்கும் அறியாமையின் இருளில் ரூஹில் குத்துசுமாக அவர் தோன்றியிருக்கிறார். அல்ஹம்துலில்லாஹ்! **இந்த உலகத்தை சீர்திருத்தவும், உலகத்துடன் பகிர்ந்து கொள்ளவும் தூய இறைவெளிப்பாட்டைப் பெறும் அல்லாஹ்வின் ஒரு தூதரின் வாழ்க்கை மற்றும் அவரது முன்னிலை என்பது லைலத்துல்கத்ரின் ஒரு தொடர்ச்சியாகும். நிச்சயமாக இது உங்களுக்கு உண்மையான லைலத்துல் கத்ர் ஆகும். எனது தோழர்களாகிய நீங்கள் இப்போது வாழ்ந்திருப்பது,**

**அல்லாஹ்வின் திருதூதராகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடையவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது (அலை) அவர்களுடையவும் காலத்தில் வாழ்ந்திருப்பது போலாகும். கடந்த காலகட்டத்தைப் போன்று அல்லாஹ்வின் அற்புதங்களை பெறுபவர்களாகயிருக்கின்றீர்கள். நீங்களும், உங்கள் மனைவிகளும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் குடும்பங்களுக்கும் உங்கள் உடல் மற்றும் ஆன்மாவுக்கு திருப்தி அளிக்கும் வகையில் அல்லாஹ் உங்களுக்கு கஷ்பு மற்றும் அசாதாரணமான நிலையில் தூய கனவுகளையும் வழங்குகின்றான். அத்தோடு வானவர்களிடமிருந்துள்ள வசனங்களை கேட்பதற்கும், வெளிப்பாடுகளை பெறுவதற்கும், தெய்வீக வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களை பெறுவதற்கான ஆற்றலையும் அவன் உங்களுக்கு வழங்கியிருக்கின்றான். மாஷா அல்லாஹ்! சுப்ஹானல்லாஹ், அல்லாஹ் அக்பர்**

நீங்கள் பாருங்கள், அல்லாஹ்வின் விருப்பத்திற்கு நீங்கள் கீழ்படியும் பொழுது. அவனுடைய தூதரை நீங்கள் அங்கீகரிக்கும் பொழுது உண்மையில் நீங்கள் ஒரு வலுவான கயிற்றைத்தான் பிடித்திருக்கின்றீர். நிச்சயமாக இதுவே அல்லாஹ்வின் சங்கம். ஆம்! ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம். இன்ஷா அல்லாஹ். உண்மை மற்றும் நேர்மையான நிலையில் கீழ்ப்படியும் இத்தகைய நம்பிக்கையாளர்களுக்காக அல்லாஹ் ஒவ்வொருமுறையும் தனது தூதரை அனுப்பி வைக்கின்றான். அல்லாஹ்வின் புறமிருந்து பரிசுத்த ஆவியுடன் வருகைதரும் ஒரு கலீ:.பத்துல்லாஹ் அல்லாஹ்வின் பெயரில் தனது வருகையின் நோக்கத்தை வெளிப்படையாக அறிவிக்கிறார். அவர் வாயிலாக இஸ்லாம் புத்துயிர் பெறுகிறது. அல்லாஹ்வின் பாதையிலிருந்து விலகிச்சென்ற அனைவருக்கும் அழைப்புவிடுக்கப்படுகிறது.

ஆகவே, என் தோழர்களே, நான் உங்களுக்குச் சொல்கிறேன், உங்கள் சிறந்த வேலைகளைத் தொடருங்கள். நீங்கள் மக்களுக்கு அஞ்சாதீர்கள். அவர்கள் என்ன சொல்வார்கள், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணி கவலைப்படாதீர்கள். வானதூதர்கள் உங்கள் மீது இறங்கி, உங்கள் இதயங்களை சீரமைக்கும் இந்த அசாதாரணமான அருட்களை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். மாஷா அல்லாஹ்!

# LAYLATUL QADR MUBARAK.

## லைலத்துல் கத்ர் முபாரக்

**ANNOUNCEMENTS**

**அறிவிப்புகள்**

இந்த பேருரையை நிறைவாற்றுவதற்குமுன், நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய சில மிக முக்கியமான அறிவிப்புகள் உள்ளன.

1. Chagos / **சாஹோஸ்** : யு. கெ வெற்றியின் பின்னர், மொரீஷியஸின் பிரதமர் பிரவிந்து ஜகநாதிற்கும், அவரது குழுவினர்களுக்கும் கடந்த சனிக்கிழமை அதாவது மே மாதம் 25 ம் தேதியன்று மிக சிறந்த முறையிலான வரவேற்பு விமான நிலையத்தில் அளிக்கப்பட்டது. (மொரீஷியஸ்) சாஹோஸ் தகராறு தொடர்பாக மொரீஷியஸின் தீர்மானத்திற்கு ஆதரவாக 116 நாடுகளிலிருந்துள்ள யு.என். உறுப்பினர்கள் வாக்களித்ததில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மே 25-ம் தேதி புதன் கிழமையன்று இரவில் நியூர்க்கில் (New York) இது நிகழ்ந்தது. 56 நாடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்தன, 6 நாடுகள் மட்டுமே தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.

2017 ஆம் ஆண்டில் பல ஐரோப்பியா நாடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்திருந்தன. ஆனால் இந்த முறை அவர்கள் வாக்களித்தனர் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த நாடுகளில், அஸ்திரேலியா, கிரீஸ், ஜயர்லாந்து, சுவிட்சர்லாந்து போன்றவை உள்ளனர். இந்த சூழ்நிலையை ஒருவர் பார்கும்போது, கோட்பாடளவில் கூறினால் இது மிக பெரிய ஒரு வெற்றியாகும் (வரலாற்றுமிக்க வெற்றி) யு, என் பொதுச்சபை உருவாகிய பிறகு, யு. கெயின் காலனியாதிக்க முறைகளை முழுமையாக முடிவு கட்டவேண்டும் என்ற நோக்கத்தை கொண்டு செயல்பட்டுவந்தது. சாஹோஸ் ஆர்க்கிபெலேஹியில் அதன் ஆட்சியை ஆறு மாதத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

மொரீஷியஸ் குடியரசைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய வெற்றியாகும். மேலும் சாஹோஸ் குடிமக்கள் அனைவருக்கும் இது ஒரு

மாபெரும் வெற்றியாகும். ஏனெனில் இந்த சாஹோஸியர்கள் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். ஆனால் மொரீஷியஸின் தீவு கூட்டமான சாஹேஸியசை திரும்பப்பெற அதாவது அதன் சுதந்திரத்தில் திரும்பிவர முடிந்தது. நிச்சயமாக இது மொரீஷியஸ் மற்றும் ஒட்டுமொத்த மனிதகுல வரலாற்றில் ஒரு இருண்ட அத்தியாயமாகும். இந்த விஷயத்தில் அதாவது யு.கெ-வின் நிலைப்பாட்டில் நான் மிக வருத்தமாகயிருந்தேன்.

நிச்சயமாக மொரீஷியசைப் பொறுத்தவரை இதுவும் ஒரு அரசியல் முலோபாயம் ஆகும். ஏனெனில் இந்த ஆண்டு மொரீஷியஸில் பொது தேர்தல் நடைபெறுகிறது. பிரதமர் மற்றும் அவரது அரசாங்கத்திற்கு சாஹோஸ் விவகாரத்தில் மொரீஷியர்களின் கவனத்தை திருப்புவதற்கும், பிரதமரை ஒரு ஹீரோவாக காட்டுவதற்கும் நன்றாக முடியும். கடந்த காலங்களில் அனைத்து அரசாங்கங்களும் சாஹோஸ் தீவுக் கூட்டத்தை திரும்பப் பெற யு.கெ-வை எதிர்த்துப் போராடின. அந்த அரசியல் தந்திரங்களை அனைத்தையும் மீறி, ஒரு மனிதாபிமான அடிப்படையில் மனித நேயத்ததின் மீள் எழுச்சிக்கான இந்த போராட்டம் வெற்றி பெற்றிருப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எனவே இது ஒரு பெரிய வெற்றியாகும், இது மொரீஷியஸீக்கு மட்டுமல்ல கட்டாயப்படுத்தப்பட்ட நிலையில் தங்கள் நாட்டை விட்டு வெளியேறிய அனைத்து ஏழைகளாகிய சஹோஸியர்களுக்கும் இது ஒரு பெரிய வெற்றி ஆகும்.

ஆனால், இப்போது, அன்புக்குரிய பிரதமர், நீங்கள் எங்களை அதாவது மொரீஷியஸின் மக்களை நீங்கள் முட்டாள்களாக எண்ணாதீர்கள். அஹலேகல் தொடர்பாக என்ன நடக்கிறது என்பதை நீங்கள் கூறுங்கள். மொரீஷியஸ் மற்றும் இந்தியா இடையே, அதாவது உங்களுக்கும், பிரதமர் நரோந்திர மோடிக்கும் இடையே என்ன நடக்கிறது என்பதை விளக்குங்கள். அஹலேக்கில் ஒரு விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கும், பிற முன்னேற்றங்களைச் செய்வதற்கும் இது போன்ற ஒரு சிறு தீவில் இவ்வளவு பணத்தை எதற்கு இந்தியா முதலீடு செய்ய வேண்டும்? இதைப் பார்த்தால், இதன் பின்னணியில் மீன் பிடிக்கும் ஏதோ ஒன்று இருக்கிறது.

## ATTACK AGAINST ISLAMN

### இஸ்லாத்திற்கு எதிரான தாக்குதல்

அன்புக் குரிய பிரதமரே, உங்கள் சுற்றுலாத்துறை அமைச்சர் அனில் கயான் முஸ்லீம் சமூகத்தை புண்படுத்தும் வகையிலான வார்த்தைகளை உச்சரித்திருக்கிறார். இஸ்லாத்திற்கு எதிராக தவறான குற்றச்சாட்டுகளை அவர் எழுப்புகிறார். மேலும் கொலை மரியாதை (Honour Killing) அதாவது இஸ்லாமிய சமுதாயத்திற்குள் கொலைசெய்வதை மதிக்கக்கூட குறிப்பிடப்படுகிறது என்றும் அவர் கூறுகிறார். இது இன வெறுப்பைத் தூண்டும் ஒன்றாகும். இத்தகைய வார்த்தைகள் இஸ்லாமை அவமதிக்கும் மற்றும் இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. இது நம் நாட்டின் நல்லிணக்கத்திற்கு தீங்குவிளைவிப்பதாகும். ஒரு அமைச்சர் எப்படி இத்தகைய கருத்துக்களை தெரிவிக்க முடியும்? மொரீஷிய தேசத்திற்கு அவர் என்ன முன்மாதிரி அளிக்கிறார்? நாம் பன்முககலாச்சாரத்தைக் கொண்ட மக்களல்லவா? நாம் சிறந்த முன்மாதிரிகளாக இருக்க வேண்டாமா?

எனவே பிரதமர் பிரவீந்து ஜகநாத் அவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் இத்தகைய அருளுக்குரிய ரமலான் மாதத்தில் இன பதட்டத்தை அமைதிப்படுத்த அவர் ராஜினாமா செய்யும் படி கேட்க வேண்டும். நான், அல்லாஹ்வின் கலீ·.பா என்ற முறையில், மொரீஷியஸிலுள்ள அனைத்து முஸ்லீம் சகோதர சகோதரிகளிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன், உங்கள் ஜமா அத் எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் அமைதியாக இருங்கள், பொறுமையை கையாளுங்கள். நாம் ஒரு அருளுக்குரிய மாதத்தில் இருக்கிறோம், இம்மாதமானது, அதன் அனைத்து அம்சங்களிலும் பொறுமை நிறைந்தாகும். இஸ்லாமிய போதனைகளின் உண்மையான மதிப்பை நாம் காட்டவேண்டும். இறைத்தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை நீங்கள் காட்ட வேண்டும் மேலும் அல்லாஹ்வின் புனித நூலான திருக்குர்-ஆனின் மதிப்பை நீங்கள் வெளிப்படுத்தவேண்டும். மொரீஷியஸில் உள்ள 5 மசூதிகள் அவர்கள் குறிவைத்திருந்தனர் என்று எனக்கு தெரிகிறது. அங்கு குற்றவாளிகள் எழுதிவைத்த பைத்தியக்காரத்தனங்கள், முஸ்லீம்களுக்கு எதிரான அந்த

மோசமான வார்த்தைகள் முற்றிலும் அருவருப்பானவையாகிறது. அல்லாஹ் தனது நீதியை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைக் குறத்து நன்கு அறிபவனாகயிருக்கிறான் ஆனால் அது நம்மிடம் வரும்போது, நாம் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கும் கட்டுபட்ட நிலையில் இருக்க வேண்டும் (இன்ஷா அல்லாஹ்) நாம் இப்போது ஒரு அருளுக்குரிய மாதத்தில் இருக்கிறோம். நமது சொந்த சீர் திருத்தத்திற்காக, சிறந்த மனிதர்களாக மாறுவதற்காக நாம் தீவிர தியங்கள் புரிய வேண்டும். இது நாம் எதிர்கொள்ளும் ஒரு நெருக்கடியான சூழ்நிலை என்பது நிச்சயம்தான் ஆனால் நாம் உணரும் இந்த பெரும் வேதனைகளை மீறி நம்மை எவ்வாறு கட்டுபடுத்துவது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்தவாறிருப்போம். இன்ஷா அல்லாஹ். நான் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். எந்த வன்முறைகளும் வேண்டாம், ரமலானுக்கு பிறகும் வேண்டாம். அல்லாஹ் மற்றும் அவனது தூதருடனான இந்த கீழ்படிதல் தொடர்ந்தும் நமக்கு இருக்கவேண்டும். இஸ்லாமிய மக்கள் ஒரு சிறந்த நம்பிக்கையாளர்கள் என்பதையும், மனித குலம் அனைவருக்கும் நாங்கள் முன் மாதிரியாக இருக்கிறோம் என்பதையும் நமக்கு காண்பிப்போம் இன்ஷா அல்லாஹ்

## CALAMITY / பேரழிவு

உங்களுக்குத் தெரிந்தபடி, கென்னத் சூறாவளி கொமரோஸில் பேரழிவை ஏற்படுத்தியது. 50,000 - த்திற்கு மேற்பட்டோர் இச்சூறாவளியால் பாதிக்கப்பட்டனர். இது மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. விலங்குகள் அலைகளால் அடித்துச்செல்லப்பட்டன, விவசாயம் அழிக்கப்பட்டது, 4200 க்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளியை இழந்தனர். ஆயிரக்கணக்கான வீடுகள் அளிக்கப்பட்டன. உணவு மற்றும் பானம் இல்லாத நிலை ஏற்பட்டன. குடிநீர் இல்லை. மின்சாரம் இல்லை. பாதைகள் மூடப்பட்டன. இந்த மக்களுக்கு உதவுவதும், விரைவில் அவர்களுக்கு ஆதரவளிப்பதும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் கடமையாகும். இன்ஷா அல்லாஹ்!

ஒட்டுமொத்த முஸ்லீம்கள் மற்றும் மானிடகுலத்தின் மீது அல்லாஹ் கருணை காட்டுவனாக! உண்மையை அல்லாஹ் பிராகாசிக்கவைப்பனாக! தவறுகள் செய்தவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து சரியான பாதையில் திரும்ப அல்லாஹ் உதவிபுரியட்டும். நன்மை செய்ய நம் இதயத்தை அல்லாஹ் தூண்டட்டும் அதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியை நமக்கு பெற முடியட்டும் ஆமீன்! நம்முடைய பிரார்த்தனைகளில் துன்பப்படுவர்களை தொடர்ந்து நினைவில் வைத்துக் கொள்வோம், மேலும் சாத்தானும் அவனுடைய படையும் பரப்பிக் கொண்டிருக்கும் தீமையை வென்றெடுக்க நேர்மையான அடியார்களுக்கு அல்லாஹ் எப்போதும் உதவும்படி பிரார்த்திப்போம். இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ்வின் ஆற்றல்மிக்க உதவியால் நமது வேலைகளில் நாம் வெற்றி பெறுவோம் என்று நமக்கு நம்புவோம் இன்ஷா அல்லாஹ் ஆமீன்.


Translated by:
Naib Amir *Azim Ahmad*
*7339689239*



ISSUED BY

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**